**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.8 |
| Name | : | திரு.விக்னேஷ்வரன் |
| Father's /Husband Name | : | சண்முகவேல் |
| Village | : | திருவாரூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Age | : | 38 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 7th day of October 2025.
A2 present. A1 absent. petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். கடந்த **23.02.2025 ம் தேதி மாலை 06.31 மணியளவில்** திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பணியிலிருந்த போது அன்றைய தினம் மாலை 06.27 மணியளவில் செளமியா என்பவரை அவரது தாயார் சுமித்ரா என்பவர் மூலம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவரை விபத்து பதிவேட்டில் பதிவு செய்து முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரை நான் பரிசோதித்த போது அவரது வலது மார்பிலும், அதன் பின்புறமும் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு நான் உரிய சிகிச்சைகள் மேற்கொண்டேன். அவரை பரிசோதனை செய்து இரத்த மாதிரி மற்றும் ஸ்கேன் எடுக்க பரிந்துரை செய்தேன். மேற்படி நோயாளி கர்ப்பமாக இருந்ததால் மகப்பேறு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றேன். மேலும் எலும்பு முறிவு மருத்துவரின் ஆலோசனைக்கு பிறகு கடந்த 28.02.2025 ம் தேதி மதியம் 02.00 மணியளவில் சிகிச்சையிலிருந்து விடுவித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரண காயம் என்று சான்று

வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் மருத்துவ சட்ட கருத்துரை ஆவணம் என்னால் வழங்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **நான் வழங்கிய மருத்துவ சட்ட கருத்துரை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.பொதுவாக ஒரு நபரை கையால் குத்தும் போது மேற்சொன்னவாறு காயம் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

நான் பரிசோதித்த நபருக்கு வெளிப்புற காயம் எதுவும் இல்லை என்றால் சரிதான். மார்புப்பகுதியிலும் முதுகுப்பகுதியிலும் வலி இருப்பதாக பொய்யாக சொல்வதற்கு வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. பொதுவாக கருத்தரித்து மூன்று மாதம் ஆன ஒரு பெண் சில நபர்களால் தாக்குதலுக்கு உட்படுத்தப்படும் போது அவருக்கு கருச்சிதைவு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. என்னிடம் சிகிச்சை பெற்ற நபர் வயிற்றில் வலி இருப்பதாக சொன்னார்களா என்றால் இல்லை. மேற்படி சொல்லியது போல் ஒரு நபர் தடுமாறி மோதிகொள்ளும் போது வலி ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.07 16:19:53 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`